# BWA அலைவரிசை பாரபட்சம்

BSNLயை ஏலத்திற்கு வெளியே வைத்து ஆக உயர்ந்த ஏலத்தொகையில் நாடு முழுவதற்குமான BWA உரிமம் 8313 கோடி செலவில் வழங்கப்பட்டது. வணிகதேர்வு சுதந்திரம்தான் மறுக்கப்பட்டது என்பதோடில்லாமல் Non-Standardised Band 2.6 GHz-Band 7 அலைவரிசைகளும் ஒதுக்கப்பட்டு BSNL தனது சொந்த முதலாளியான DOTஆல் ஏமாற்றப்பட்டுள்ளது. தனியாருக்கு குறைந்த அலைவரிசை 2.3 GHz தரப்பட்டு 4G க்குரிய LTE தொழில்நுட்பத்திற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நமக்கு இவ்வாய்ப்பு தவறிப்போயுள்ளது என அறியப்பட்டுள்ளது. இதனால் தனியார்களைவிட அதிகமான கோபுரங்களை BSNL அமைக்கவேண்டும். நமது Capex-Opex செலவு எகிறிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நமது BWA சேவை எழுந்திருக்காது என்று செய்திகள் வரத் துவங்கின. தனியாருக்கு தரப்பட்ட அலைவரிசையில் 2G- 3G Interoperability வாய்ப்பும் இருக்கிறது என்பதும் தெரிய வந்தது. BSNLக்கு அலைவரிசை தரக்குறைவாக ஒதுக்கப்படுகிறது என்பதை நமது கார்ப்பரேட் திட்ட கண்காணிப்பு செல் தெளிவாக எடுத்துரைத்து கீழ்கண்ட கோரிக்களை DOTக்கு முன் வைத்தது.

- BSNLக்கும் தனியாருக்கு இணையான TDD Standard Bands வழங்கப்படவேண்டும்
- இல்லையேல் BWAக்காக கட்டிய பணத்தை திரும்பத் தரவேண்டும்
- வாய்ப்பில்லையெனில் அப்பணம் வங்கியில் கிடந்தால் என்ன வட்டி வருமோ அதையாவது திரும்பத்தரவேண்டும்

எக்கோரிக்கையும் ஏற்கப்படாத நிலையில் BWA அலைவரிசையை திரும்ப ஒப்படைப்பது என்ற நிலையை நிர்வாகம் எடுத்ததாக செய்திகள் வெளியாயின.

இந்நிலையில் தொழிற்சங்கங்கள் ஒருசேர 8313 கோடியை திரும்பக்கொடு என வேலைநிறுத்தக் கோரிக்கை வைத்துள்ளோம்.

கேளாகாதினராக இருக்கும் நிதிஅமைச்சகத்தை நமது போராட்டம் பணியவைக்கும் என நம்புகிறோம்.

## 3G உரிமம் தனியார்களின் ஏமாற்று

3G உரிமம் ஏலத்தில் தனியார்கள் இலாபம் வரும் இடங்களை மட்டும் கண்டறிந்து ஏலத்தொகை கட்டினர். நாளடைவில் தாங்கள் ஏலமே எடுக்காத பகுதிகளுக்கும் குறுக்கு வழியில் 3G சேவைதனை தரத்துவங்கிவிட்டனர்.

பெருநகரங்களான டெல்லி மும்பையில் இவ்விதி மீறல் துவங்கியது. அதிகபட்ச ஏலத்தொகையான 3317 கோடி- டெல்லி, 3247 கோடி-மும்பை கொடுத்துதான் MTNL தனது சேவைகளை துவக்க முடிந்தது. ஏர்டெல்,ரிலையன்ஸ், வோடொபோன் போன்றவை பிற ஏலம் பெற்ற தனியார்கள். ஆனால் ஏலமே எடுக்காத ஐடியா ஒருபைசா கூட உரிமத்தொகை செலுத்தாமல் மற்ற தனியாருடன் பகிர்ந்துகொண்டு ரோமிங் ஏற்பாடு என்ற பெயரில் தனது சேவையை துவங்கியது. வோடொபோன் ஏர்டெல் ஐடியா ஆகிய மூவரும் சேர்ந்து விதிமீறலை துவங்கி வைத்தன.

இதேபோல் மத்தியபிரதேசத்தில் வோடொபோனிற்கோ ஏர்டெல்லிற்கோ உரிமம் இல்லை. அங்கு டாடா, ரிலையன்ஸ், ஐடியா தலா 258.36 கோடி கொடுத்து உரிமம் பெற்றன. இதே தொகையை BSNLலும் செலுத்தி உரிமம் பெற்றது. ஆனால் ஒருபைசா உரிமத்தொகை செலுத்தாமல் வோடொபோன் ஏர்டெல் ஆகிய இரண்டும் 40000 வாடிக்கையாளர்களை பெற்றுவிட்டன.

இவ்வகை விதிமீறல்களால் அரசுக்கு 20000 கோடி நிதி இழப்பு என்ற குற்றச்சாட்டை உச்சநீதிமன்ற வழக்கறிஞர் யாகேஷ் ஆனந்த் சுட்டிக்காட்டி பொதுநல வழக்கு ஒன்றை கடந்த செப் 2011ல் டெல்லி உயர்நீதிமன்றத்தில் தொடுத்துள்ளார். SNEA தொழிற்சங்கமும் வழக்கில் சேர்ந்துள்ளது. இதற்கிடையில்

ஏர்டெல் ஐடியா வோடொபோன் முதலாளிகள் இணைந்து பிரதமருக்கு மிரட்டல் தொனியில் கடிதம் எழுதியுள்ளனர்.

தனியாருக்கு தங்கு தடையற்ற வர்த்தக சுதந்திரம்- விதி மீறல் எப்போது செய்தாலும் அதுவே பின்னால் அரசின் கொள்கை முடிவாக மாறும் என்பது தொலைத்தொடர்பில் வாடிக்கையாகி வருகிறது. தனி பெரும் முதலாளிகள் சொல்வது மட்டுமே அரசின் முடிவு என்ற நிலை தொடர்கிறது. BSNL MTNL போன்ற பொதுத்துறைகளுக்கு எந்த தேர்வு சுதந்திரமும் இல்லை என்பதே நிலை. Stake Holders Meeting க்கு BSNL MTNL பிரதிநிதிகள் அமைச்சரால் அழைக்கப்படுவதில்லை. BSNL MTNL CMD போர்டுகளுக்கு தனியார் CEOக்கு இருக்கும் மரியாதை-தேர்வு உரிமையில்லை.

BSNL MTNL வர்த்தக நிறுவனங்கள் என்றால் அரசின் தலையீடற்ற வர்த்தக உரிமை இருந்தால்தான் level playing field சாத்தியம். நமது போராட்டம் 3Gல் வர்த்தக உரிமையை மீட்டுத்தரும்- தனியார்களின் அத்துமீறலை முறியடிக்கும் என நம்புகிறோம்

27-11-11